**பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம் - 2019**

பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பேராதனிய - பதுளை - செங்கலடி வீதியின் பதுளையிலிருந்து செங்கலடி வரையிலான வீதியின் 147 கிலோமீற்றர்களை புனரமைப்பதன் மூலம் பிராந்தியத்தில் போக்குவரத்தை முன்னேற்றுவதற்குப் பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கும் ஏற்ற வகையில் ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் இணைப்பை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 140 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி யூஎஸ்.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2019 மார்ச் அளவில் பூர்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன்

இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு இல.08 இற்கு முரணாக செயற்திட்டமானது 2019 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்கான பத்து இடைக்கால கொடுப்பனவு பட்டியல்கள் மீதான ரூபா 337.84 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, நடைமுறைவேலை பெறுமதி, ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தவேண்டியவை மற்றும் செலுத்தவேண்டிய பிடிகாசு என்பன முறையே ரூபா 337.84 மில்லியன், 251.86 மில்லியன், 20.2 மில்லியனினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. மேலும், வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 65.78 மில்லியனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் அதிகரிப்பு மற்றும் குறைவு. | எதிர்கால இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் நிதிக்கூற்றக்களில் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

## 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| இல | உருப்படி | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல். | ஔப்ஜடி(OFID) பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழான, ஒவ்வொரு ஒப்பந்தமும் அண்ணளவாக 20 கிலோமீற்றர்கள் நீளத்தினை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதி 01, பொதி 02 மற்றும் பொதி 03 போன்றவற்றின் ஒப்பந்தத்துடன் தொடர்புபட்ட பௌதீக செயலாற்றல் முறையே 72.02 சதவீதம், 62 சதவீதம் மற்றும் 32.57 சதவீதத்தினை அறிக்கையிட்டிருந்தது. | மந்தகதியான திட்டமிடல் காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கா ன சாத்தியம். | உடன்பட்டனர். | வீதிகளின் மிகுதி புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல். | ஔப்ஜடி பிரிவின் பொதி 03 இற்கான ஒப்பந்தமானது, உடன்படிக்கையின் பிரகாரம் உண்மையான பூர்த்தியாக்கல் காலம் 30 மாதங்களாக இருந்தும் கூட நிர்மான வேலைகள் ஆரம்பித்ததிலிருந்து 29 மாதங்கள் கடந்ததன் பின்னர் 2019 | மந்தகதியான திட்டமிடல் காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கா ன சாத்தியம். | இக்குறித்த ஒப்பந்ததாரர்களின் செயலாற்றல் செயற்திட்டம் முழுவதும் மந்தகதியாக இருந்தது. எனவே, | வீதிகளின் மிகுதி புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிட்ட செயலாற்றல் 99.88 சதவீதத்திற்கு எதிராக 32.57 சதவீத மிகவும் குறைந்தளவான செயலாற்றலை காட்டியமை அவதானிக்கப்பட்டது. | | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் மந்தகதியான செயலாற்றலினை சரிசெய்ய ஒப்பந்ததாரரிற்கு ஒப்பந்த பொறியியலாளரினால் திருத்துவதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல். | ஈஓடி(EOT) 2020 நவம்பர் 20 வரை வழங்கப்பட்டிருந்தும், 2020 நவம்பர் முடிவிலான ஓஎப்ஐடி(OFID) பொதிகளின் பௌதீக செயலாற்றல் 47.88 சதவீதமாக மாத்திரம் இருந்தது இது வேலைகளின் வழங்கப்பட்ட அரைவாசி காலம் முடிவடையும் போது பூர்த்தி செய்யப்பட்டிராமையை சுட்டிக்காட்டுகின்றது. | மந்தகதியான திட்டமிடல் காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | இவ் ஒப்பந்த பொதி 03 பற்றி பல்வேறு மட்டங்களிலான கலந்துரையாடல்கள் நடைமுறையில் உள்ளது. இவ்வேலையினை பூர்த்தி செய்ய எதிர்காலத்தில் இதற்கான திருத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடும். | வீதிகளின் மிகுதி புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல். | புனரமைப்பு மற்றும் மேம்பாட்டின் எஸ்எப்டி பிரிவின் கீழாக ஒவ்வொரு பொதியின் ஏறத்தாள 30கி.மீகள் 2021 மே 04 இல் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், அண்ணளவாக பொதி 1 இல் 46.57 சதவீதம் பொதி 02 இல் 67.20 சதவீதம் மற்றும் பொதி 03 இல் 36.73 சதவீதம் பௌதீக செயலாற்றல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது. | மந்தகதியான திட்டமிடல் காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | வேலைகள் பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதிக்குள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கக் கூடும். | வீதிகளின் மிகுதி புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த குறித்த நிபந்தனையின் உபபிரிவு 14.6 இன் பிரகாரம், ஓர் இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் சான்றுபடுத்தப்பட்ட வேலை ஒப்பந்த பெறுமதியில் 2 சதவீதத்தை விட அதிகமாக காணப்படல் வேண்டும். இருப்பினும், இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களின் மதிப்பீட்டின் போது தேவையான தொடக்க நிலைக்கு கீழான 32 நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டது. | இடைக்கால கொடுப்பனவு மதிப்பீடகள் மீதான கிரயத்தின் அதிகரிப்பு. | நிபந்தனைகள் ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சலிலுள்ள விடயங்கள் மற்றும் ஒப்பந்ததாரரிற்கு நிதியளித்த வங்கியின் தேவைப்பாடு போன்ற காரணங்களினால் பல்வேறு பிரிவுகள் மற்றும் செலுத்தப்பட்ட ஐபிசிகளில் தளர்த்தப்பட்டிருந்தது. | கிரயம், நேரம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் தேவையற்ற நன்மைகள் போன்றவற்றினை குறைக்க ஒப்பந்த நிபந்தனையில் கூறப்பட்ட விடயங்களை பின்பற்றல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 38 ஆனது 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருந்தும், லுனுகல பிரதேச செயலகத்திற்கு சொந்தமான 133 காணித்துண்டுகளிற்கான இழப்பீடு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இழப்பீடகள் மீதான வட்டி கிரயங்கள் அதிகரிக்கும் சாத்தியம். | இவ் இழப்பீட்டு கொடுப்பனவுகள் 2020 ஆண்டிற்கான ஒதுக்கீட்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி இழப்பீடுகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) கூட்டு மொத்தம் ரூபா 770,880 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான இடைக்கால கொடுப்பனவுகளூடாக காணி சுவீகரிப்பு புலனாய்வு மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணி சுவீகரிப்பு மதிப்பீட்டு உத்தியோகத்தர் போன்றோரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்துடனான (OFID) கடன் உடன்படிக்கையானது காணி கொள்வனவிற்கான பணத்தினை வழங்கியிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | காணி சுவீகரிப்பு விடயங்களின் அவசரம் காரணமாக, அமைச்சுடனான ஆலோசனையின் பின்னர் இந் நபர்களை வேலையில் ஈடுபடுத்த வேண்டியிருந்தது. | எதிர்கால செயற்திட்டங்களின் செயற்திட்ட முகாமைத்தவ பிரிவுக்கு தேவையான உண்மை ஆளனியினரை அடயாளப்படுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. |